# செய்தி குறிப்பு

சிவகங்கை மாவட்டம் கால்நடை பராமரிப்புத்துறையில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர், கால்நடை பராமரிப்பு உதவியாளர் மற்றும் ஆய்வக உடனாள் பதவிகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களில் தகுதியான நபர்களுக்கு நேர்காணல் அலுவலக உதவியாளர் பதவிக்கு 19.04.2022 அன்றும், கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிக்கு 20.04.2022 முதல் 27.04.2022 வரை (ஞாயிறு நீங்கலாக) ஏழு நாட்களும், ஆய்வக உடனாள் பதவிக்கு 29.04.2022 அன்றும் மருதுபாண்டியர் அரசு மேல்நிலைப்பள்ளி, மாவட்ட ஆட்சியரக வளாகம், சிவகங்கை -630562 என்ற முகவரியில் தினமும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது.

மேற்படி நேர்காணலுக்கு தகுதியான நபர்களுக்கு அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுளளது. நேர்காணலுக்கு அழைக்கப்பட்ட தகுதியான நபர்கள் மற்றும் அழைக்கப்படாத தகுதிநீக்கம் செய்யப்பட்ட நபர்களின் பெயர் பட்டியல் பதவிவாரியாக sivaganga.nic.in என்ற இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுளளது. தகுதி நீக்கம் செய்யப்பபட்டவர்கள் அப்பட்டியலை பார்த்து உரிய காரணத்தினை தெரிந்து கொள்ளலாம்.

தகுதியான நபர்களில் அழைப்பாணை கிடைக்கப்பெறாத நபர்கள் மேற்படி இணையதளத்தில் வெளியிட்டுள்ள தகுதியான பட்டியலில் பெயர் இடம் பெற்றிருந்தால் சுழற்சி எண் அறிந்து கொண்டு தகுந்த ஆதாரங்களுடன் மாவட்ட ஆட்சியரக வளாகத்திலுள்ள சிவகங்கை கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகத்திற்கு நேரில் சென்று அதன் நகலினை பெற்றுக்கொள்ளளலாம் என்றும் நேர்முக அழைப்பாணை இல்லாதவர்கள் நேர்முகத்தேர்வு வளாகத்தினுள் செல்வதற்கு அனுமதிக்கபபடமாட்டார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 04575 – 240415

ஒம்/-நா.நாகநாதன்,

மண்டல இணை இயக்குநர்,

கால்நடை பராமரிப்புத்துறை.

சிவகங்கை.